No. of Printed Pages : **12**

**7736**

பதிவு எண்
Register Number

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

# Part - III

# சமூக அறிவியல் / SOCIAL SCIENCE

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version)

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 100
Time Allowed : 3.00 Hours ] [ Maximum Marks : 100

**அறிவுரைகள் :**
(1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறைபாடு இருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்த வேண்டும்.

**Instructions :**
(1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.
(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

**குறிப்பு :** இவ்வினாத்தாள் **நான்கு** பகுதிகளைக் கொண்டது.
**Note :** This question paper contains **four** Parts.

## பகுதி - I / PART - I

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **14x1=14**

(ii) கொடுக்கப்பட்ட **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**Note :** (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

[ திருப்புக / Turn over

**1.** ஜெர்மனியோடு மியூனிச் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட பிரிட்டன் பிரதமர் யார் ?

(அ) சேம்பர்லின் (ஆ) வின்ஸ்டன் சர்ச்சில்

(இ) லாயிட் ஜார்ஜ் (ஈ) ஸ்டேன்லி பால்டுவின்

Which Prime Minister of Britain signed the Munich Pact with Germany ?

(a) Chamberlain (b) Winston Churchill

(c) Lloyd George (d) Stanley Baldwin

**2.** மார்ன் போர் எதற்காக நினைவு கூறப்படுகிறது ?

(அ) ஆகாயப் போர்முறை (ஆ) பதுங்குக் குழிப் போர்முறை

(இ) நீர்மூழ்கிக் கப்பல் போர்முறை (ஈ) கடற்படைப் போர்முறை

What is the Battle of Marne remembered for ?

(a) air warfare (b) trench warfare

(c) submarine warfare (d) ship warfare

**3.** விதவை மறுமணச் சங்கத்தை ஏற்படுத்தியவர் __________.

(அ) மகாதேவ் கோவிந்த் ரானடே (ஆ) தேவேந்திரநாத் தாகூர்

(இ) ஜோதிபா புலே (ஈ) அய்யன்காளி

__________ was the founder of Widow Remarriage Association.

(a) Mahadev Govind Ranade (b) Devendranath Tagore

(c) Jyotiba Phule (d) Ayyankali

**4.** எந்த ஆண்டு வார்சா ஒப்பந்தம் கலைக்கப்பட்டது ?

(அ) 1979 (ஆ) 1989 (இ) 1990 (ஈ) 1991

In which year the Warsaw Pact was dissolved ?

(a) 1979 (b) 1989 (c) 1990 (d) 1991

5. ஜப்பானியக் கப்பற்படை அமெரிக்க கப்பற்படையால் எங்கே தோற்கடிக்கப்பட்டது ?

(அ) க்வாடல்கெனால் போர் (ஆ) மிட்வே போர்

(இ) லெனின்கிரேடு போர் (ஈ) எல் அலாமெய்ன் போர்

Where was the Japanese Navy defeated by the American (US) Navy ?

(a) Battle of Guadalcanal (b) Battle of Midway

(c) Battle of Leningrad (d) Battle of El Alamein

6. ஆறுகளின் மூலம் உருவாகும் மண் :

(அ) செம்மண் (ஆ) கரிசல் மண் (இ) பாலைமண் (ஈ) வண்டல்மண்

The soils formed by the rivers are :

(a) Red soil (b) Black soil (c) Desert soil (d) Alluvial soil

7. பழவேற்காடு ஏரி __________ மாநிலங்களுக்கிடையே அமைந்துள்ளது.

(அ) மேற்கு வங்காளம் மற்றும் ஒடிசா

(ஆ) கர்நாடகா மற்றும் கேரளா

(இ) ஒடிசா மற்றும் ஆந்திரப்பிரதேசம்

(ஈ) தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேசம்

Pulicat Lake is located between the States of __________.

(a) West Bengal and Odisha

(b) Karnataka and Kerala

(c) Odisha and Andhra Pradesh

(d) Tamil Nadu and Andhra Pradesh

8. பின்னடையும் பருவக்காற்று __________ லிருந்து ஈரப்பதத்தை எடுத்துக் கொள்கிறது.

(அ) அரபிக் கடல் (ஆ) வங்கக் கடல்

(இ) இந்தியப் பெருங்கடல் (ஈ) தைமூர்க் கடல்

Retreating monsoon wind picks up moisture from :

(a) Arabian Sea (b) Bay of Bengal

(c) Indian Ocean (d) Timor Sea

9. இந்தியாவின் முதல் மக்கள்தொகை கணக்கெடுப்பு __________ ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது.

(அ) 1991 (ஆ) 1881 (இ) 1872 (ஈ) 2011

In India the first census was carried out in the year __________.

(a) 1991 (b) 1881 (c) 1872 (d) 2011

10. பருவக்காற்று காடுகள் __________ எனவும் அழைக்கப்படுகின்றன.

(அ) அயன மண்டல பசுமை மாறாக் காடுகள்

(ஆ) இலையுதிர்க் காடுகள்

(இ) மாங்குரோவ் காடுகள்

(ஈ) மலைக் காடுகள்

The monsoon forests are otherwise called as __________.

(a) Tropical evergreen forest

(b) Deciduous forest

(c) Mangrove forest

(d) Mountain forest

11. எந்த இரு நாடுகளுக்கிடையே பஞ்சசீல ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது ?

(அ) இந்தியா மற்றும் நேபாளம் (ஆ) இந்தியா மற்றும் பாகிஸ்தான்

(இ) இந்தியா மற்றும் சீனா (ஈ) இந்தியா மற்றும் ஸ்ரீலங்கா

The Panchasheel Treaty has been signed between :

(a) India and Nepal (b) India and Pakistan

(c) India and China (d) India and Sri Lanka

12. மாநில அமைச்சரவையின் தலைவர் :

(அ) முதலமைச்சர் (ஆ) ஆளுநர்

(இ) சபாநாயகர் (ஈ) பிரதம அமைச்சர்

The State Council of Ministers is headed by :

(a) The Chief Minister (b) The Governor

(c) The Speaker (d) The Prime Minister

**13.** காட் (GATT) -இன் முதல் சுற்று நடைபெற்ற இடம் :

(அ) டோக்கியோ (ஆ) உருகுவே (இ) டார்குவே (ஈ) ஜெனீவா

GATT's first round held in :

(a) Tokyo (b) Uruguay (c) Torquay (d) Geneva

**14.** இந்தியாவில், உலகளாவிய பொது வழங்கல் முறையை ஏற்றுக் கொண்ட ஒரே மாநிலம் __________.

(அ) கேரளா (ஆ) ஆந்திரப்பிரதேசம்

(இ) தமிழ்நாடு (ஈ) கர்நாடகா

__________ is the only State in India to adopt universal Public Distribution System (PDS).

(a) Kerala (b) Andhra Pradesh

(c) Tamil Nadu (d) Karnataka

## பகுதி - II / PART - II

**குறிப்பு : எவையேனும் 10** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **28 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **10x2=20**

**Note :** Answer **any 10** questions. Question No. **28** is **compulsory**.

**15.** முத்துத் துறைமுக நிகழ்வைப் பற்றி எழுதுக.

Write about the Pearl Harbour incident.

**16.** திருநெல்வேலி எழுச்சி பற்றி ஒரு குறிப்பு வரைக.

Write a note on the Tirunelveli Uprising.

**17.** ''டாலர் ஏகாதிபத்தியம்'' – வரையறுக்கவும்.

Define "Dollar Imperialism".

**18.** பெரியாரை ஒரு பெண்ணியவாதியாக மதிப்பிடுக.

Estimate Periyar as a feminist.

**19.** பிரம்ம சமாஜத்தால் ஒழிக்கப்பட்ட சமூகத் தீமைகளைப் பட்டியலிடுக.

List out the Social evils eradicated by Brahmo Samaj.

**20.** கரிசல் மண்ணின் ஏதேனும் இரண்டு பண்புகளைக் கூறுக.

State any two characteristics of black cotton soil.

**21.** கடற்கரைச் சமவெளி எவ்வாறு உருவாகிறது ?

How is coastal plain formed ?

**22.** தமிழ்நாட்டின் வேளாண் பருவக் காலங்களை எழுதுக.

Write the cropping seasons of Tamil Nadu.

**23.** 'பருவமழை வெடிப்பு' என்றால் என்ன ?

What is 'burst of monsoon' ?

**24.** மாங்கனீசின் பயன்களைக் குறிப்பிடுக.

State the uses of Manganese.

**25.** இந்தியக் குடியரசுத் தலைவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார் ?

How is President of India elected ?

**26.** இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களை எழுதுக.

Name the neighbouring countries of India.

**27.** உலகமயமாக்கலின் நேர்மறையான தாக்கங்கள் எவையேனும் இரண்டினை எழுதுக.

Write any two positive impacts of Globalization.

**28.** சென்னை ''ஆசியாவின் டெட்ராய்ட்'' என்று அழைக்கப்படுவது ஏன் ?

Why is Chennai called "Detroit of Asia" ?

## பகுதி - III / PART - III

குறிப்பு : **எவையேனும் 10** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **42 -க்கு** **கட்டாயமாக** விடையளிக்கவும். **10x5=50**

**Note :** Answer **any 10** questions. Question No. **42** is **compulsory**.

**29.** கோடிட்ட இடங்களை நிரப்புக.

(i) இந்தியாவின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினர் __________ ஆவார்.

(ii) கிழக்குத் தொடர்ச்சி மலையின் தென் பகுதியில் உள்ள உயரமான சிகரம் __________ ஆகும்.

(iii) மாநிலங்களவை உறுப்பினர்களின் பதவிக்காலம் __________ ஆண்டுகளாகும்.

(iv) நாசிச ஜெர்மனியின் ரகசியக் காவல்படை __________ என அழைக்கப்பட்டது.

(v) இந்தியாவில் __________ துறை முதன்மைத் துறையாகும்.

Fill in the blanks.

(i) The first Woman Legislator in India was __________.

(ii) __________ is the highest peak in the Southern part of the Eastern Ghats.

(iii) The members of the Rajya Sabha are elected for a term of __________ years.

(iv) The Secret State Police in Nazi Germany was known as __________.

(v) __________ sector is the primary sector in India.

**30.** பன்னாட்டுச் சங்கத்தின் பணிகளை மதிப்பிடுக.

Estimate the work done by the League of Nations.

**31.** இந்தியாவின் பிரிவினைக்குப் பின்னால் இருந்த காரணங்களை விவாதிக்கவும்.

Discuss the reasons behind the Partition of India.

**32.** (அ) வேறுபடுத்துக.

(i) வேளாண் சார்ந்த மற்றும் கனிமம் சார்ந்த தொழிலகங்கள்

(ii) உள்நாட்டு வணிகம் மற்றும் பன்னாட்டு வணிகம்

(ஆ) காரணம் கூறுக.

வட இந்திய ஆறுகள் வற்றாத ஆறுகள்.

(a) Distinguish between :

(i) Agro-based industry and mineral-based industry

(ii) Internal trade and International trade

(b) Give Reason :

North Indian Rivers are perennial.

**33.** அடிப்படை உரிமைகளைக் குறிப்பிடுக.

Point out the Fundamental Rights.

**34.** இமயமலையின் உட்பிரிவுகளையும், இந்தியாவிற்கு அதன் முக்கியத்துவம் பற்றியும் விவரிக்கவும்.

Explain the divisions of Northern Mountains (Himalayas) and its importance to India.

**35.** நகரமயமாக்கம் என்றால் என்ன ? அதன் சிக்கல்களை விவரிக்கவும்.

What is Urbanization ? Explain its problems.

**36.** இந்தியாவில் உள்ள பருத்தி நெசவாலைகளின் பரவல் பற்றி எழுதுக.

Write about the distribution of cotton textile industries in India.

**37.** 1857 -ஆம் ஆண்டின் பெரும் புரட்சிக்கான காரணங்கள் குறித்து ஆராயவும்.

Discuss the causes of the Revolt of 1857.

**38.** வெளியுறவுக் கொள்கையை நிர்ணயிக்கும் அடிப்படைக் காரணிகள் எவை ?

Discuss the basic determinants of India's Foreign Policy.

**39.** மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) கணக்கிடும் முறைகள் யாவை ? அவைகளை விவரிக்கவும்.

What are the methods of calculating Gross Domestic Product (GDP) ? Explain them.

**40.** கருப்பு பணம் என்றால் என்ன ? அதற்கான காரணங்களை எழுதுக.

What is black money ? Write the causes of black money.

**குறிப்பு :** **மாற்றுத்திறனாளி மாணவர்கள்** காலக்கோடு மற்றும் வரைபடத்தில் நிகழ்வுகளையும் இடங்களையும் குறிப்பிட்டு காட்டுவதற்கு பதிலாக அவற்றைப் பற்றிய குறிப்புகள் மட்டும் எழுத வேண்டும்.

**Note :** **Differently abled candidates** have to write only notes for the questions related to Time-line chart and map.

**41.** கீழ்க்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக.

1920 முதல் 1940 வரையிலான ஆண்டுகட்கு உட்பட்ட முக்கிய நிகழ்வுகள் ஏதேனும் ஐந்தினை காலக்கோட்டில் எழுதுக.

Draw a Time-line for the following :

Write any five important events between 1920 and 1940.

42. உலக வரைபடத்தில் பின்வரும் இடங்களைக் குறிக்கவும்.

(i) கிரீஸ்

(ii) துருக்கி

(iii) ஹிரோஷிமா

(iv) மாஸ்கோ

(v) சான்பிரான்சிஸ்கோ

Mark the following places on the map of World.

(i) Greece

(ii) Turkey

(iii) Hiroshima

(iv) Moscow

(v) San Francisco

## பகுதி - IV / PART - IV

**குறிப்பு :** பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும். **2x8=16**

**Note :** Answer the following questions.

43. (அ) முதல் உலகப்போருக்கான முக்கியக் காரணங்களை விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) கிழக்கிந்திய கம்பெனியாரை எதிர்த்து வீரபாண்டிய கட்டபொம்மன் நடத்திய வீரதீரப் போர்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.

(a) Explain the main causes of the First World War.

**OR**

(b) Attempt an essay of the heroic fights of Veerapandya Kattabomman, conducted against the East India Company.

**குறிப்பு : மாற்றுத்திறனாளி மாணவர்கள்** வரைபட தொடர்புடைய வினாக்களுக்கு குறிப்புகள் மட்டும் எழுதவும்.

**Note :** **Differently abled candidates** have to write only notes for the questions related to map.

**44.** (அ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.

(i) சோட்டா நாகபுரி பீடபூமி

(ii) காரகோரம்

(iii) மலைக் காடுகள்

(iv) அதிக மழை பெறும் பகுதி

(v) பாலை மண்

(vi) ஹிராகுட் அணை

(vii) அகத்தியர் மலை உயிர்கோளப் பெட்டகம்

(viii) பருத்தி விளையும் பகுதி

**அல்லது**

(ஆ) கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.

(i) வைகை ஆறு

(ii) கேரளா

(iii) தேயிலை விளையும் பகுதி

(iv) சோழமண்டல கடற்கரை

(v) காகித தொழிலகம்

(vi) துறைமுகம் (ஏதேனும் ஒன்று)

(vii) சென்னை

(viii) மன்னார் வளைகுடா

(a) Mark the following places on the given outline map of India.

(i) Chota Nagpur plateau

(ii) Karakoram

(iii) Mountain forests

(iv) Area of heavy rainfall

(v) Desert soil

(vi) Hirakud dam

(vii) Agasthiyamalai Biosphere Reserve

(viii) Area of cultivation of cotton

**OR**

(b) Mark the following places on the given outline map of Tamil Nadu.

(i) Vaigai river

(ii) Kerala

(iii) Tea growing area

(iv) Coromandel coast

(v) Paper Industry

(vi) Sea Port (Any one)

(vii) Chennai

(viii) Gulf of Mannar

**- o 0 o -**